

விக்கிரவாண்டியில் கிழக்கு ஒன்றியம் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.அமைச்சர் க.பொன்முடி தலைமை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னிலையில் பொன். கௌதம சிகாமணி வரவேற்புரையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.





தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஊராட்சி ஒன்றியம் ஒரத்தூர் ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.30 கோடி மதிப்பில் நலவாழ்வு மைய புதிய கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.06.2024) திறந்து வைத்தார். அருகின் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் (திருவையாறு) துரை சந்திர சேகரன், (பட்டுக்கோட்டை) ந. அண்ணாதுரை மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உஷா புண்ணிய மூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பாலகணபதி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கலைவாணி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம்

# இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னிலை

## பொன். கௌதம சிகாமணி வரவேற்புரை! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

விழுப்புரம், ஜூன் 20-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், இந்தியா கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து, இந்தியா கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம், இராதாபுரம், கலைஞர் திடலில் காலை 11 மணியளவில் உயர்கல்வித் துறை அமைச்சரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்புச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகத்ரட்சகன் முன்னிலை வகித்தார்.

மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் எம்.பி.,யுமான பொன்.கௌதம சிகாமணி வரவேற்புரையாற்றினார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் துரை.ரவிக்குமார் எம்.பி., மாவட்ட கழக அவைத்தலைவர் மா.ஜெயச்சந்திரன், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் இரா.லட்சுமணன், விழுப்புரம் மாவட்ட கழக பொருளாளர் ரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட கழக துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ரா.கற்பகம், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் எம்.தேன்மொழி, பேரூராட்சி மன்ற தலைவர் எம்.அப்துல் சலாம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன், விக்ரவாண்டி ஒன்றிய குழு தலைவர் ஆர். சங்கீதஅரசி, ஒன்றிய குழு துணை தலைவர் ஆர். ஜீவிதா, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், சிபிஎம் மாநிலகுழு ஆர். ராமமூர்த்தி, சிபிஎம் மாநிலக்குழு ஏ.வி.சரவணன், காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவர் எம்.டி.குலாம் மொய்தீன், காங்கிரஸ் வடக்கு மாவட்ட தலைவர் ஆர்.பி.ரமேஷ், சிபிஐ மாவட்ட செயலாளர்கள் எம்.சுப்பிரமணியன், ஆ. செரிராஜன், மதிமுக மாவட்ட செயலாளர் பாபு. கோவிந்தராஜ், விசிக மாவட்டசெயலாளர் தி.திலீகன், தவாக மாவட்ட செயலாளர் எம்.ஆர்.குமரன்,

திக டி.கே.பழனிவேல், இ.யூ.மு.லீ.க மாவட்ட செயலாளர்கள் எஸ்.எம். அமீர்அப்பாஸ், எஸ்.மன்சூர்உசேன், ம.நே.ம.க மாவட்ட செயலாளர் கா.அஸ்கர்அலி, மநீம பி.பாபு, கழக முன்னாள் இளைஞர் அணி எ.செ.எத்திராசன், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ராஜமாணிக்கம், நா.தனராஜன், கா.சாம்பசிவம், ரா.அன்னையன், தே.செல்வராஜ், நா.நாகப்பன், பா.மகேஸ்வரி, எஸ். சன், என்.பாஸ்கரன், ஜி.சீனிவாசன், ஏ.ஜி.எஸ்.கணேசன், பி.குமார், கிருஷ்ணன், பி.முருகவேல், எஸ் ய.அசைமணி, பி.ரகுபதி, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பி.கருணாகரன், துரை ரெட்டியார், ஜனார்த்தனன், பழனி.குமரேசன், திருநிலைகண்டன், நடராஜன், விடுதலைசிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் வெற்றி வேந்தன், ஜெயச்சந்திரன், சந்துரு, சிபிஎம் நிர்வாகிகள் ஏ.சங்கரன் வி.கிருஷ்ணராஜ் ஏ.கிருஷ்ணமூர்த்தி, எஸ். சித்ரா, சிபிஐ நிர்வாகிகள் மூர்த்தி பி..பாலசுப்ரமணியன், ஆனந்தன், மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் டி.சாதிக்பாஷா, கே.ஜபருல்லாதீன்,

கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் கடலூர் எம்.எல்.ஏ., கோ.ஐயப்பன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், கழக துணை செயலாளர்கள் அ. ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், மாநகர கழக செயலாளர் கே.எஸ். ராஜா,

ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி. சிவகுமார், தங்க.ஆனந்தன், டி.காசிராஜன், பி.சுப்பிரமணியன், ப.இராமலிங்கம், முத்து.பெருமாள், ஆர். கலையரசன்,கே.ஆர்.ராயர், ப.திருமாவளவன், தெ.காசிராஜன், பி.சுப்ரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், கே.ஆர்.கே.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், ஆர். நாராயணசாமி, எம்.மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், நளன்புத்தூர் நடராஜன், வி.ஆர். ராஜேந்திரகுமார், எம். சோழன், இரா.விஜயசுந்திரம், பி.சுந்திரபாண்டியன், இரா.கலையரசன், வி. கோவிந்தசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ் விஜயராகவன், வெற்றிவேல், மஞ்சு, வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன்,

நகர கழகச் செயலாளர் த.தமிழ்ச்செல்வன், துணை தலைவர் ஆர்.ராமர்,

பேரூர் கழக செயலாளர்கள் த.கந்தன், ப.மனோகரன், எஸ்.கணேசமூர்த்தி, கே.வி.பி.சங்கர், க.பழனி, ஜெ.அன்வர் சதாத், பூ.செல்வகுமார், மாவட்ட உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

ஒன்றிய கழக செயலாளர் ஜெய.ரவிதுரை நன்றியுரையாற்றினார்.

### பயிற்சி வகுப்புகளை பணியில் சேர்ந்துள்ள

# புதிய பொறியாளர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!

## பொறியாளர்களுக்கான அடித்தளப் பயிற்சி வகுப்பினைத் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 20 -

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (18.6. 2024), நெடுஞ்சாலைத்துறையில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவிப் பொறியாளர்களுக்கும் மற்றும் பதவி உயர்வு பெற்ற இளநிலைப் பொறியாளர்களுக்கும் அடித்தளப் பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து, உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

**கற்றார்முன் கற்ற செலச்**
**சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்.**
(குறள் 724)

பொருள்: அறிஞர்களின் அவையில் நாம் கற்றவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லி நம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து மேலும் பலவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

என்ற குறளுக்கேற்ப நெடுஞ்சாலைத்துறை பயிற்சி மையம் இயங்கி வருகிறது என்று கூறி அமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்த தொடங்கினார்கள்.

"நீங்கள் ஒன்றைச் சொன்னால், கேட்டு அதை மறந்து விடுவேன்; கற்பித்தால் அதை நினைவில் கொள்வேன்; என்னை ஈடுபடுத்தினால் நான் அதைக் கற்றுக் கொள்வேன்; என்று பயிற்சியின் பெருமையைப் பற்றி பெஞ்சமின் பிராங்கிளின் என்ற அறிஞர் எடுத்துரைத்துள்ளார். அதுபோல, பொறியாளர்களுக்குப் பயிற்சி மிகவும் முக்கியம் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

பயிற்சி பற்றி இந்திய சாலைகள் குழுமம் விரிவான வழிகாட்டுதல்களை IRC:128ல் வெளியிட்டுள்ளது. அந்த வழிகாட்டுதல்களின் பின்னுரையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

புதிதாக பணியில் சேர்ந்த பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலைத்துறை உள் சூழலை நன்கு தெரிந்திருக்க இப்பயிற்சி வழங்கப்படுகிறது. இது நடைமுறைகள், நடத்தை விதிகள், கொள்கைகள் ஆகியவற்றை புரிந்து கொள்ள உதவுகிறது. ஏராளமான வழிகாட்டிக் குறிப்புகளும், கையேடுகளும் சாலைப் பணிகள் நிர்வாகம் குறித்து இந்திய சாலைகள் குழுமத்தால் அவ்வப்போது வெளியிடப்படுகிறது. சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கும் வழிகாட்டிக் குறியீடுகளுக்கும் இடைவெளி இருக்கத்தான் செய்கிறது. அந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஒவ்வொரு சிறப்புப் பிரிவிலும் பயிற்சிகள் மிகவும் அவசியம்.

**நுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும்!**

கல்லூரிகளில் பொறியியல் பாடங்களைப் படிப்பதென்பது வேறு; தேர்ந்த அனுபவம் மிக்க பொறியாளரிடம் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வதென்பது வேறு, பொறியாளர்கள் பயிற்சிகளின் மூலமாக நுட்பங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டுமென்று விரும்புகிறேன். மனித வள மேம்பாட்டில் பயிற்சி ஒரு அடிப்படைக் கருத்தாகும். இது அறிவுறுத்தல் மற்றும் பயிற்சி மூலம் ஒரு குறிப்பிட்ட திறனை விரும்பிய தரத்திற்கு வளர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளது. பயிற்சி என்பது மிகவும் பயனுள்ள கருவியாகும். பெரிய நிறுவனங்கள் பணியாளர்களின் பயிற்சிகளுக்காகப் பெரிய அளவில் நிதியைச்செலவு செய்கிறார்கள். பெரும்பாலும் ஆராய்ச்சியையும் வளர்ச்சியையும் சேர்த்து ஒரே பிரிவாக வைத்து பணியாளர்களுக்கு அவ்வப்போது பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமும் பயிற்சி மையமும் இணைந்து செயல்படுகின்றன.

பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கான பணியாளரின் திறன்களை அதிகரிக்கும் செயல் ஆகும். பெரிய நிறுவனங்களில் ஆண்டுதோறும் மொத்தப் பணி நேரத்தில் ஏறக்குறைய 5 விழுக்காடு பணி நேரம் பயிற்சிக்காக ஒதுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையில் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட நவீன வசதிகளுடன் நெடுஞ்சாலைத்துறைப் பயிற்சி மையம் அமைந்துள்ளது. அந்த வசதிகளை பயன்படுத்தி நெடுஞ்சாலை துறை பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள்வழங்கப்படுகின்றன.

எந்தவொரு நிறுவனமும் திறமையான பணியாளர்களைப் பெற்றிருந்தால்தான் நன்கு வளரமுடியும். 2022 ஆம் வருடம் தொடங்கி, 5 ஆண்டுகளில் துறையின் அனைத்துப் பொறியாளர்களுக்கும் மற்றும் பிற அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்கும் வகையில், விரிவான பயிற்சித் திட்டம் (CTP) வடிவமைக்கப்பட்டுள்ளது. விரிவான பயிற்சித் திட்டம் 25.4.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது இப்பயிற்சி திட்டமானது, மொத்தம் 27 தலைப்புகளில் வகுக்கப்பட்டு, இத்துடன் பொறியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் நடத்தப்பட்டு வருகிறது.

**சிறப்பு வகுப்புகள்!**

2023-24 ஆம் ஆண்டில், 1,150 பொறியாளர்களுக்கும், 646 தொழில்நுட்ப சாராத அலுவலர்களுக்கும், பல்வேறு தலைப்புகளில் பயிற்சித்திட்டத்தின்படி, பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 15 துணை ஆட்சியர்களுக்கும், தலைமை செயலகத்தின் 110 பிரிவில் உள்ள 24 அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 2024-2025 ஆம் ஆண்டில், இதுவரை 108 பொறியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து பயிற்சிகளின் போதும், காலை வேளையில் யோகா மற்றும் தியான வகுப்புகள், சிறந்த யோகா ஆசிரியர்களால் மனதும், உடலும் சிறக்க வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு நன்கு ஆலோசித்து உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி வகுப்புகளை துறையில் புதிதாக இணைந்துள்ள பொறியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழாவில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தலைமையுரையாற்றினார்.

விழாவில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டின் திட்ட இயக்குநர் மருத்துவர் இரா. செல்வராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் க.சேகர், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா.சந்திரசேகர், தலைமைப் பொறியாளர்கள் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மா.முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாகை மாவட்டத்தில் அரசு மருத்துவமனையில்

# ரூ.4.95 கோடியில் புதிய 11 கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்! என்.கௌதமன்- உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை , ஜூன் 20-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நாகை மாவட்டத்தில் ரூ. 4.95 கோடி மதிப்பீட்டில் பொது சுகாதாரத்துறை சார்பில் புதிய 11 கட்டடங்கள் மற்றும் நாகப்பட்டினம் அரசு மருத்துவ மனை வளாகத்தில் மறு சீரமைக்கப்பட்ட விபத்து பிரிவு மற்றும் அவசர சிகிச்சை பிரிவு திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கிஸ் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ரூ. 4.95 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 11 கட்டிடங்கள் மற்றும் மறு சீரமைக்கப்பட்ட நாகை அரசு மருத்துவ மனையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பரமணியன் திறந்து வைத்து பேசினார். நிகழ்ச்சியில் . நாகை நடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் நாகை ஜெ.முகமது ஷாநவாஸ், கீழ்வேளூர் நாகைமாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராரசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ஆரூர் மணிவண்ணன், ரவிச்சந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், கா.பழனியப்பன், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், மகா. குமார், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், முகமது சுல்தான், மரியசார்லஸ், சுப்பர மணியன் பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மருத்துவர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில் நாகை மாவட்டத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வேதாரண்யம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் கரியாப்பட்டினம் வட்டார பொதுசுகாதார அலகு, ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் வாய்மேடு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் திருமருகல் வட்டார பொது சுகாதார அலகு, சுகாதார நிலையங்களான பூதங்குடி, வடகரை ஆகியவற்றில் தலா ரூ. 35 லட்சம் மதிப்பீட்டிலும், தெற்கு பொய்கைநல்லூர், அக்கரைப் பேட்டை, கோகூர், ஆகிவற்றில் தலா 30 லட்சம் மதிப்பீட்டிலும், கொத்தன்காடு ஆரம்ப துணை சுகாதார நிலையம் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது இவற்றின் மொத்த மதிப்பீடான ரூ.4.95 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 11 மருத்தவ கட்டிடங்களை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் நாகை மருத்துவ கல்லூரி மருத்தவமனை ஒரத்தூரில் புதிதாக கட்டப்பட்ட மருத்துவ கல்லூரிக்கு மாற்றப்பட்டதை தொடர்ந்து நாகைஅரசு மருத்துவ மனை மூடப்பட்டதாக ஏற்பட்ட வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நூற்றாண்டு பழமை வாய்ந்த அரசு மருத்துவமனை 100 சதவிதம் முழுமையாக செயல்படும் மருத்தவமனையில் எம். ஆர்.ஜ. ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே ஆகியவறை உள்ளது.

தற்போது சி.டி.ஸ்கேன் விரைவில் அமைக்கப்படும். இந்த மருத்துவமனையில் மகப்பேறு மருத்தவமனை மற்றும் குழந்தை கள் மருத்துவம் ஆகியவை இங்கு இயங்கி வருகிறது. தனியார் மருத்துவமனையை காட்டிலும் அரசு மருத்துவமனை சிறந்து விலங்குகிறது. ஒரத்தூரில் அமையப்பட்டுள்ள மருத்துவ கல்லூரியில் தினந்தோறும் ஆயிரம் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். அதேப்போல நாகை அரசு மருத்துவமனையில் 200 முதல் 300 உள் மற்றும் புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழ் நாட்டில் உள்ள மருத்தவமனையில் காலியா உள்ள அனைத்து மருத்தவர் காலி பணியிடங்களை நிரப்ப தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளனர்.

நாகை மாவட்டத்தில் 41 மருத்துவர்களக்கு 21 மருத்துவர்கள் தற்போது பணியாற்றுகிறார்கள். 20 மருத்து வர்களை கூடிய விரைவில் பணியமர்த்தப் பட உள்ளனர். தற்போது 9 மருத்தவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனை ஒரு காலிப்பணியிடம் கூட மருத்தவத்துறையில் இல்லை என்கிற நிலையை ஏற்படுத்தப்படும். அதேப் போல் நாகை மாவட்டத்தில் 100 சதவீதம் மருத்துவர்கள் நிரப்பட உள்ளனர் இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சங்கீதமங்கலம் ஊராட்சி பாகம் எண்–32,33,34,35 ஆலோசனை கூட்டத்தில் சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆலோசனை வழங்கினார். உடன் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி,மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சரவணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம், சி.மாரிமுத்து, பா.ராமஜெயம், இரா.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பாலு, பேரூர் செயலாளர் சி.கே.அன்பு, பா.முருகையன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் மங்கலம் பிரபாகரன், ஒன்றிய துணை செயலாளர்கள் இரா.சிவக்குமார், இளம்பரிதி, மாவட்ட பிரிநிதி குப்புசாமி, தேவேந்திரன், இளைஞரணி செயலாளர்கள் பா.அன்பழகன், எம்.ஆர். கே.வினோத், ஆவூர் சூரியா, லோகநாதன், கிளை கழக செயலாளர்கள், வரவேற்பு ஒன்றியக் குழு உறுப்பினர் பாரதிநாகராஜன் சிறப்புரையாற்றினார். கிளை செயலாளர்கள் டி.நாகராஜ், ஏ.நாகராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முருகதாஸ், காங்கிரஸ் துரைராஜ், இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (18.06.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2024–2025ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியக் கோரிக்கையின் மீதான புதிய அறிவிப்புகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி.ப.காயத்ரி கிருஷ்ணன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று முன்தினம் (18.06.2024) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், மருங்கூர் கிராமத்தில் தொல்லியல் துறை வாயிலாக முதற்கட்ட அகழாய்வுப் பணிகள் காணொளி காட்சி வாயிலாக தொடங்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.